அனுப்புநர்,

முனைவர்.வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்

பெறுநர்,

இயக்குநர்,
பள்ளி கல்வித்துறை,
DPI வளாகம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை.

ந.க.எண்:அ4/ A-117/85/ 2023 நாள்:18.01.2024

அன்புடையீர்,

பொருள் : திருக்குறள் மாணவர் மாநாடு 2024 - விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் மாவட்டத்தில் "தீராக்காதல் திருக்குறள்" என்ற திட்டத்தின் கீழ் திருக்குறள் மாநாடு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது - தமிழ்த் திறனறித் தேர்வு-2023 வெற்றி பெற்ற மாணவ மாணவியர்கள் இரு நாட்கள் தங்கி மாநாட்டில் பங்கேற்பது - தொடர்பாக.

பார்வை : மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.அ4/A-117/85/2023 நாள்:22.12.2023

******

அறநெறிகளை பற்றிய உலகின் மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றாக கருதப்படும் திருக்குறளின் தொன்மை மற்றும் மாண்பினை பறைசாற்றும் விதமாக “ தீராக் காதல் திருக்குறள்” திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு இடையே திருக்குறளின் அடிப்படையில் வாழ்வியல் கோட்பாடுகளை அடித்தளமாக அமைத்து அவர்களின் எதிர்காலத்தையும் சமுதாயத்தையும் செழுமைப்படுத்தும் முயற்சியாக விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்த் திறனறிவுத் தேர்வு 2023 வெற்றி பெற்ற அனைத்து மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களையும் அழைத்து எதிர்வரும் பிப்ரவரி 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் “திருக்குறள் மாணவர் மாநாடு - 2024” என்ற நிகழ்வு, மாவட்ட நிர்வாகத்தால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் திறனறித் தேர்வு - 2023 ல் வெற்றி பெற்ற மாணவர்களில், சிறந்த மற்றும் ஆர்வமுள்ள 20 மாணாக்கர்களுக்கு மிகாமல் தேர்வு செய்து இம்மாநாட்டில் பங்கேற்க ஆற்றுப்படுத்தி, திருக்குறள் மாணவர் மாநாடு சிறப்பாக நடந்திட ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: வழிகாட்டு நெறிமுறைகள்

தங்கள் அன்புள்ள,

18/01/2024.

மாவட்டஆட்சியர்,
விருதுநகர்.

நகல்:

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்,

18.01.2024

# திருக்குறள் மாணவர்கள் மாநாடு - 2024

## வழிகாட்டு நெறிமுறைகள்

மாணவர்களுக்கான போட்டிகள்

திருக்குறள் மாணவர் மாநாடு- 2024 பங்கு பெறும் மாணவர்களுக்கு மாநாட்டில் நடத்தப்படும் போட்டி விவரங்கள்

### குழுப் போட்டிகள்

1. வினாடி வினா

- மாநாட்டில் குழுப் போட்டியான "வினாடிவினா" மூன்று நிலைகளாக நடத்தப்படும்.
- முதல் நிலையில் எழுத்து தேர்வாக நடத்தப்படும். எழுத்து தேர்வில் மாநாட்டில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ளலாம். இதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்கள் பிடிக்கும் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.
- இவர்கள் மாவட்ட வாரியாக குழுக்களாக தேர்வு செய்யப்பட்டு இரண்டாம் நிலையாக அரையிறுதிப் போட்டி நடத்தப்படும்.
- அரையிறுதியில் தேர்வு செய்யப்பட்ட குழுக்கள் மூன்றாம் நிலையாக இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.
- இறுதிப் போட்டியில் வென்ற மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். குழுக்கள் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படும்.
- "திருக்குறள் போற்றும் விழுமியங்கள்" என்ற மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டும் திருக்குறள் வரலாறு மொழிப்பெயர்ப்புகள், உரை வரலாறு, திருவள்ளுவர் ஓவியம், குமரிமுனை சிலை, திருக்குறள் பதிப்பு வரலாறு, திருக்குறள் அச்சேறிய வரலாறு உள்ளிட்ட பகுதிகளிலிருக்கும் திருக்குறளின் கருத்துக்கள், மொழி, இலக்கிய நயம் உள்ளிட்டவற்றிலும் இப்போட்டிகளுக்கான வினாக்கள் அமையலாம்.

2. நாடகம் அல்லது பாவனை நாடகம் அல்லது நடனம்

- இப்போட்டி குழுப் போட்டியாக நடத்தப்படும். அனைத்து மாவட்டங்களில் இருந்தும், மேற்கண்ட நாடகம் அல்லது பாவனைநாடகம் அல்லது நடனம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு கலை நிகழ்ச்சி மட்டுமே நிகழ்த்த வேண்டும். மாவட்ட அளவில் தயார் செய்து வந்து, இங்கு குழுப் போட்டியில் பங்கேற்கலாம்.
- அதற்கான கால அளவு ஆறு நிமிடங்கள்.

- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படும்.
- அரையிறுதி சுற்றுகள் நடத்தப்பட்டு, இறுதிப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
- நாடகம் அல்லது பாவனைநாடகம் அல்லது நடனம் இந்த கலைப் போட்டிகள் மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளாக நடத்தப்படுவதால் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பாகவே மாவட்ட அளவிலேயே மாநாட்டில் பங்குபெறும் மாணவர்களை ஒருங்கிணைத்து பயிற்சி வழங்கி அழைத்து வந்தால் சிறப்பாக இருக்கும்.

## தனிநபர் போட்டிகள்

பேச்சுப்போட்டி மற்றும் கவிதைப்போட்டி:

1. திருக்குறள் கருத்துகள்
2. திருக்குறள் வரலாறு ( ஓவியம், மொழிபெயர்ப்பு, பதிப்பு, உரை, சிலை உள்ளிட்டவை)
3. திருக்குறள் சிறப்புகள்

ஆகியவற்றை பற்றி பேச்சுப்போட்டி நடத்தப்படும்.

- மாநாட்டில் பங்கேற்கும் மாணவர்களுக்கு இடையே போட்டிகள் நடத்தி தேர்வு செய்யப்படுபவர்களுக்கு இறுதிப்போட்டி நடத்தப்படும்.
- இறுதிப் போட்டிக்கான கால அளவு 5 நிமிடங்கள். பேச்சுப்போட்டி தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பாக மட்டுமே தலைப்புகள் வழங்கப்படும்.
- திருக்குறள் கருத்துக்களின் கீழ் ,பொருளுக்கு ஏற்ப கவிதை எழுதப்பட வேண்டும். மேற்கண்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும்.

## சிறப்புப் போட்டிகள்

- மேற்கண்ட போட்டிகள் தவிர்த்து மாவட்ட அளவில் சிறுகதை எழுதுதல் போட்டி மற்றும் குறளோவியம் - ஓவியம் வரைதல் போட்டி என இரு போட்டிகளை மாவட்ட அளவில் நடத்தப்பட வேண்டும்.
- சிறுகதை எழுதுதல் போட்டி (மூன்று பக்கங்களுக்கு மிகாமல்) மற்றும் குறளோவியம் - ஓவியப் போட்டி மாவட்ட அளவில் நடத்தி சிறப்பாக சிறுகதை எழுதிய முதல் இரண்டு மாணவர்கள் மற்றும் சிறப்பாக ஓவியம் வரைந்த முதல் இரண்டு மாணவர்களை தேர்வு செய்து தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் விபரப்பட்டியலை (அட்டவணை - 3) 30/01/2024

மாலைக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். சிறந்த கதைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்படும் அக்கதைகளுக்கான பதிப்புரிமை ஏற்பாட்டாளர்களுக்குரியது.

- சிறுகதைகள் - திருக்குறள் போற்றிய விழுமியங்கள் என்ற கருத்தை மையப்படுத்தி கதைக்கரு அமைதல் வேண்டும்.(தனிப்பட்ட தலைப்புகள் இதற்கு இல்லை மாணவர்களின் கற்பனைகளுக்குரியது)
- ஓவியம் - திருக்குறள் போற்றிய விழுமியங்கள் என்ற கருத்தை மையப்படுத்தி ஓவியக்கரு அமைதல் வேண்டும்.
- இப்போட்டிகளில் மட்டும் (ஓவியம் /சிறுகதை எழுதுதல்) தமிழ் திறனறித் தேர்வு 2023-ல் வெற்றி பெற்ற மாணவர்களும் இதர உயர்நிலை மேல்நிலை வகுப்பு மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
- வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருக்குறள் மாணவர் மாநாட்டு நிறைவு விழாவில்பரிசுகளும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.
- மாவட்ட அளவில் சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்ற இரண்டு மாணவர்களும் ஓவிய போட்டியில் வெற்றி பெற்ற இரண்டு மாணவர்களும் அவர்கள் விருப்பம் இருப்பின் மாநாட்டில் கலந்து கொள்ளலாம்.

மேற்கண்ட இரண்டு போட்டிகளிலும் தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் விபர பட்டியலை அட்டவணை3) 31/01/2024 அன்று மாலைக்குள் thirukkuralconference.vnr2024@gmail.com ன்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## பொதுவான குறிப்புகள்:

1. 02/02/2024 அன்று காலை 08.30 மணியளவில் வருகை புரிய வேண்டும், வருகை பதிவு மையத்தில் வருகை பதியப்படும்.
2. மாணவர்கள் தங்குவதற்குரிய உடைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை எடுத்து வர வேண்டும்
3. இரு நாள்களுக்கும் மாணவர்களுக்கு உணவு தங்குமிடம் ஏற்பாடு செய்யப்படும்.
4. ஒவ்வொரு மாவட்டத்திற்கு பொறுப்பு அலுவலர் நியமனம் செய்யப்பட்டு விபரம் (அட்டவணை 2) அனுப்பப்பட வேண்டும்.
5. பொறுப்பு ஆசிரியர் மாணவர்களை மாநாட்டிற்கு பாதுகாப்பாக அழைத்து வருதல் நிகழ்வில் பங்கேற்க செய்தல் மீண்டும் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
6. பொறுப்பு ஆசிரியர்களை உள்ளடக்கிய கட்செவி குழு(Whats app) ஆரம்பிக்கப்பட்டு அதில் இது தொடர்பான இதர தகவல்கள் பரிமாறப்படும். சந்தேகங்களை குழுவில் பகிரப்பட்டு நிவரத்தி செய்யப்படும்.
7. மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பாக மாவட்ட அளவில் இருமுறை மாணவர்களை ஒருங்கிணைத்து பயிற்சி நடத்தி வந்தால் சிறப்பாக அமையும்.
8. மாணவர்கள் பள்ளிச் சீருடையுடன் கலந்து கொள்ள வேண்டும். குழுப்போட்டிகளில் நடனம், நாடகத்திற்கு தேவையான உடைகள் மற்றும் அலங்கார பொருட்களை கொண்டு வரவேண்டும்.

9. கீழ்கண்ட விபரங்களை குறிப்பிட்ட தேதிக்குள் thirukkuralconference.vnr2024@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## மாநாட்டு நிகழ்வுகள்:

மாநாட்டில் மாணவர்களுக்கான கலை இலக்கிய போட்டிகள் சிறப்பு பேச்சாளர்களில் சிறப்பு உரை, திருக்குறள் இசை நிகழ்ச்சி குறள் விளையாட்டு போன்றவை நடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல், அழைப்பிதழுடன் அனுப்பப்படும்.

இது தொடர்பான ஏதேனும் சந்தேகங்கள், தகவல்கள் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய நிகழ்வு ஒருங்கிணைப்பு கட்டுப்பாற்றை பொறுப்பாளர்கள் விபரம்
(திரு.வி.பாலகிருஷ்ணன், 8667573421, ஆர்.விஜயபாலன், 9698810699)

அட்டவணை -1

(20.01.2024-க்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்)

| மாணவர் பெயர் | பள்ளியின் பெயர் | பள்ளியின் விலாசம் | மாணவரின் பெற்றோர் தொடர்பு எண் |
|---|---|---|---|
| | | | |

அட்டவணை -2

(20.01.2024-க்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்)

| மாணவர் பெயர் | தொலைபேசி எண் | மாணவர்கள் வரும் வண்டியின் எண் | ஓட்டுநர் தொடர்பு எண் |
|---|---|---|---|
| | | | |

அட்டவணை -3

(30.01.2024-க்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்)

| வ.எண் | போட்டியின் விபரம் | வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் |
|---|---|---|
| 01 | சிறுகதை எழுதுதல் போட்டி | 1. |
| | | 2. |
| 02. | குறளோவியம்- ஓவியம் வரைதல் | 1. |
| | | 2. |